

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) நீலாங்கரையில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினரும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளருமான எஸ்.எஸ். பாலாஜி அவர்களின் மகன் மரு. பா. கௌதம் – மரு. இரா. கீர்த்தி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிக்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



திருச்சியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கி.ஆ.பெ.விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் ரூபாய் 1.30 கோடி மதிப்பீட்டில் நோய்த்தொற்றை எளிதில் கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறையை தெரிவிக்கும் கருவியினையும், பொதுமக்கள் சிரமமில்லாமல் பயணிக்கும் வகையில் ரூபாய் 36 இலட்சத்தில் புனரமைக்கப்பட்ட மின்தூக்கி சேவையையும் தொடங்கி வைத்து,உள்நோயாளிகளுக்கு பாதுகாப்பான முறையில் உணவு வழங்கும் தட்டுகளையும், முகம் மற்றும் வாய் பகுதி பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு பற்பசை மற்றும் பல்துலக்கி ஆகியவற்றை வழங்கி, ரூபாய் 110 கோடி மதிப்பில் அனைத்து வசதிகளுடன் தரை தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப்குமார் மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகர பொறியாளர் சிவபாதம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. எஸ்.குமரவேல், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.உதயா அருணா, மருத்துவமனை துணை கண்காணிப்பாளர் மரு.அருண்ராஜ், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, டோல்கேட் சுப்பிரமணி பகுதி செயலாளர் இளங்கோ, கோட்ட தலைவர் விஜயலட்சுமி கண்ணன்,எஸ் வி ஆர் விஜயலட்சும, திருநாவுக்கரசு முத்து பழனி, சோழன் சம்பத் ஹரிஹரன் தனபால் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற

# பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசனுக்குப் பாராட்டு விழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.18 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கம் (WSAVA CE) மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) சார்பில், பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற 21 வது உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கத்தின் தொடர் கல்வித் திட்டம் (WSAVA CE) மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) கருத்தரங்க நிகழ்ச்சியில், பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற பாரா பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

இந்த 21வது உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கத்தின் தொடர் கல்வித் திட்டம் மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் 14வது தேசிய கருத்தரங்கை துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கே பரா பாட்மிட்டன் வீராங்கனை தங்கை துளசிமதியின் சாதனைகளை அனைவரும் போற்றி பாராட்டி உள்ளீர்கள். தங்கை துளசிமதி அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, தன்னுடைய திறமையின் மூலம், விளையாட்டுத்துறை இட ஒதுக்கீட்டில் B.V.Sc (Bachelor of Veterinary Science) சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்.

### 2 கோடி ரூபாய் ஊக்கத் தொகை!

சமீபத்தில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்கு பெருமைத் தேடித் தந்துள்ளார். சர்வதேச அளவிலான போட்டிகளில் தொடர்ந்து ஏராளமான பதக்கங்களை குவித்து வருகிறார்.

சமீபத்தில், நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக தங்கை துளசிமதி அவர்களுக்கு உயர் ஊக்கத்தொகையாக 2 கோடி ரூபாய் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தங்கை துளசிமதி அவர்களை அனைவரும் பாராட்டுவதை பார்க்கும் போது, விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக மட்டுமல்லாமல், அவருடைய உடன்பிறவா அண்ணனாகவும்,, நான் பெருமையும் மகிழ்ச்சியும், அடைகிறேன். அவரை இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

உலகெங்கிலும் உள்ள கால்நடை மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு நுண்ணறிவுகளைப் பரிமாறிக் கொள்ளவும், புதுமைகளைப் பகிர்ந்து கொள்ளவும், சிறிய விலங்கு பராமரிப்பில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கவும் இந்த சிம்போசியம் அவசியமான தளமாக உள்ளது.

கால்நடை நிபுணர்களாக, உங்கள் பொறுப்பு தனிப்பட்ட சிறு விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதைத் தாண்டி, பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல், செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு கல்வி கற்பித்தல், விலங்குகள் மற்றும் அவற்றின் பராமரிப்பாளர்களின் உடல் நலனை பேணுகின்ற பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவர்களுக்கு மனநலத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்த விரும்புகிறேன். உங்களுடைய தொழில், பெரும்பாலும் உணர்வுரீதியாகவும், உடல்ரீதியாகவும் சவாலானதாகும்.

இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக தமிழ்நாடு சிறு விலங்குகள் பயிற்சியாளர்கள் சங்கத்தின் முயற்சிகளை நான் வாழ்த்துகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், கால்நடைகளின் நலனை மேம்படுத்துதல் மற்றும் கால்நடைகளுக்கான மாநில சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு வெளியிட்ட சில குறிப்பிடத்தக்க அறிவிப்புகளை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

### ரூ. 1 கோடியில் ரேபிஸ் தடுப்பூசி!

ஒரு முக்கிய நடவடிக்கையாக, கால்நடை பராமரிப்புத் துறையின் ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இதில், 5 லட்சம் தெரு விலங்குகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி 1 கோடி ரூபாய் செலவில் 50% மானியத்துடன் போடப்படும். இம்முயற்சி நமது விலங்குகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், வெறி நாய்க்கடி பரவுவதைத் தடுப்பதன் மூலம் பொது சுகாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

மேலும், 400 கால்நடை மருத்துவர்களுக்கு ரூ.1 கோடி செலவில் விரிவான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை வழங்குவதற்கான அறிவிப்பையும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு வெளியிட்டுள்ளது. கால்நடை மையங்களில் நவீன நோயறிதல் கருவிகளைக் கையாளும் நிபுணத்துவத்தை மருத்துவர்களுக்கு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கால்நடை மருத்துவ நிபுணர்களை புதிய தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாடு விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் நலனில் முன்னணியில் இருப்பதை உறுதி செய்கின்றோம்.

இந்த முற்போக்கான நடவடிக்கைகள், விலங்குகளுக்கு ஆரோக்கியமான, பாதுகாப்பான மற்றும் நிலையான சூழலை உருவாக்குவதற்கான தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன. இந்த கருந்தரங்க நிகழ்ச்சியானது, விலங்குகளின் வாழ்க்கையை வளப்படுத்த அர்த்தமுள்ள விவாதங்களில் ஈடுபட உதவும் என்று நான் நம்புகிறேன். இந்த கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பாராட்டப்பட்ட தங்கை துளசிமதி அவர்கள் விளையாட்டுத்துறை, கால்நடை மருத்துவத்துறை என இரண்டிலும் இன்னும் பல உயரங்களைத் தொட நம்முடைய திராவிட மாடல் அரசும், முதலமைச்சர் அவர்களும் என்றும் அவருக்கு துணை நிற்பார்கள். அவரது சாதனைகள் தொடரட்டும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.கே.என்.செல்வகுமார், இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPAI) தலைவர் மரு.ஆர்.ஜெயபிரகாஷ், தமிழ்நாடு சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்க தலைவர் மரு.ஜெ.வெங்கடேஷ், மற்றும் மரு.டி.சுரேஷ், மரு. பி.ஸ்ரீதேவி உள்பட கால்நடை மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனர், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தாய்மாமா, திருவாரூர் மாவட்ட வேளாண் விற்பனை குழு முன்னாள் தலைவர் கோவில்திருமாளம் தெட்சிணாமூர்த்தி அவர்களின் 101வது பிறந்த முன்னிட்டு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் ஆலத்தூர் பாண்டியன், மாணலூர் சுந்தராஜன், மயிலாடுதுறை ரூரல் புஷ்பராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டையில் 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, நவ. 18 -

புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ். திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி , பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் (16.11.2024) அன்று துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள், கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள், மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள், பேச்சு, கட்டுரை, ஒலியப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

பின்னர் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கூட்டுறவுத் துறையின் மூலம் மகளிர்சுய உதவிக் குழுக் கடன், பயிர் கடன், நகைக் கடன், உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா துவக்கி வைத்து, மகளிர்சுய உதவி குழுக் கடன், கே.சி.சி பயிர் கடன்கள், கூட்டுப் பொறுப்பு குழு பயிர் கடன், கைம்பெண்கள் கடன், மாற்றுத்திறனாளிகள் கடன் உள்ளிட்ட கடனுதவிகள் 721 பயனாளிகளுக்கு ரூ.5.02 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 197 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் பயிர் கடன், கே.சி.சி. AH கடன், நகைக்கடன், கூட்டுப் பொறுப்புக் குழு கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், சுய உதவிக்குழுக் கடன்கள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் கைம்பெண்கள் கடன், மத்திய கால முதலீட்டு கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், பயிர் காப்பீடு உள்ளிட்ட பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, கூட்டுறவுத் துறையின் மூலம் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று தங்களது வாழ்வின் பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்குதல் உள்ளிட்டவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா துவக்கி வைக்கப்பட்டது.

மேலும், கூட்டுறவு கடன் சங்கங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்காற்றி வருவதன் மூலம் பல்வேறு வகையான கடன் உதவிகள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு அதிக அளவிலான கடனுதவிகளை வழங்கி தமிழகம் சிறந்து விளங்குகிறது.

எனவே தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் பெற்று பயனடையும் வகையில் தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாக கொண்டு சேர்த்திட வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை. முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), புது க்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அ.ஜீவா, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் தனலட்சுமி, சரக துணைப் பதிவாளர் ப. மணிமேகலை மற்றும் எம்.எம்.பாலு, க.நைனாமுகமது,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத்துறை அலுவலர்களுக்கான திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்தான ஆய்வுக்கூட்டம் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தப.ஆகாஷ், நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் .ஜெ.முகமது ஷா நவாஸ், .வி.பி.நாகை மாலி, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம் இரண்டாம் கட்டமாக 15.11.2024 அன்று துவக்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் எல்லப் பாளையம் அங்கன்வாடி மையத்தில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி. செல்வராஜ், திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம்) பூங்கோதை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.